" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2009ம் ஆண்டு ஜீன் திங்கள் 30-ம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** ***" அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்***
**எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"**

**பொருள் :** அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்ற இந்த நான்கு பண்பு நலன்களும் ஒழியாமல் இருத்தலே வேந்தனுக்கு இயல்பாம்.

**ஆ)** **தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

### மாமன்ற தீர்மானம் எண் .702

**மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மு.க. அழகிரி அவர்களுக்கு பாராட்டு தீர்மானம்**

நீண்டகால அரசியல் வரலாற்றில் அதிகாரப் பொறுப்புகள் பெறுகின்ற வாய்ப்புகள் இருந்தும் அவைகளை நிராகரித்துவிட்டு எங்களைப் போன்ற அடித்தட்டு மக்களை அரியணை ஏறவைத்து அழகு பார்த்தவர் திரு.மு.க. அழகிரி அவர்கள்.

சோதனைகளை வெல்லுகின்ற ஆற்றலும் சாமான்ய மக்களை சரித்திர நாயகர்களாக மாற்றும் ஆற்றல் படைத்த திரு.மு.க. அழகிரி அவர்களின் ஆற்றலை நீண்டகாலம் கவனித்துக் கொண்டிருந்த மதுரை மக்கள் இவ்வளவு ஆற்றல் பெற்ற இவரை நாட்டை ஆளும் நாடாளுமன்றத்திற்கு அனுப்பினால் நான்மாடல் கூடல் நகராம் மதுரை நான்கு திசையும் பாராட்டும்படி வளர்ச்சிபெறும் என்பதை உணர்ந்த மதுரை மக்கள் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் திரு. மு.க. அழகிரி அவர்களை வெற்றிபெறச் செய்து இந்திய நாட்டின் அமைச்சராக்கி மதுரைக்கு பெருமை சேர்த்த வாக்காளப் பெருமக்களுக்கு இம்மான்றம் இத்தீர்மானம் மூலம் மாபெரும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

அமைச்சர் அவர்கள் மீது மகத்தான நம்பிக்கை வைத்துள்ள மதுரை மக்களை அறிந்த அமைச்சர் திரு. மு.க. அழகிரி அவர்கள் அனைவரும் பாராட்டும்படியான மக்கள் பணியை அசுரவேகத்தில் செய்ய தொடங்கி விட்டார் என்று எல்லா ஏடுகளும் பாராட்டத் தொடங்கி விட்டதை இம்மான்றம் எண்ணிப் பார்க்கும்போது மதுரையின் வளர்ச்சி மாற்றாரும் பாராட்டும்படியாக அமையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

மத்திய அரசிடம் இருந்து அமைச்சர் திரு.மு.க.அழகிரி அவர்களின் மூலமாக அரும்பணிகளை ஆற்றலுடன் செய்து முடிக்க இம்மான்றம் காத்துக்கிடக்கிறது. ஆணையிடுங்கள் உங்களோடு நாங்களும் இணைந்து நம்மை உருவாக்கிய மதுரை மக்களை வாழ வைப்போம். வளம் செழிக்க செய்வோம். மதுரை மக்கள் நம்மீது வைத்துள்ள நல்ல எண்ணத்தை நிறைவேற்ற முதல் ஊக்க மருந்தாக இருக்கும் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மு.க.அழகிரி அவர்களுக்கு இம்மான்றம் மாபெரும் பாராட்டை இத்தீர்மானம் மூலம் தெரிவித்துக் கொள்கிறது.

**மாமன்ற தீர்மானம் எண் .703**

**மாண்புமிகு துணை முதல்வர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இம்மான்றத்தின் பாராட்டு தீர்மானம்**

உள்ளாட்சிகள் நல்லாட்சிகளாக மலர்ந்திட மாபெரும் பணியாற்றி மக்களின் உள்ளத்தில் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இடம் பிடித்த காரணத்தால் அவர் பணி அனைத்து துறைகளும் பெற்றிட ஆசைப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் மக்களின் ஆதரவோடு தமிழகத்தின் துணை முதல்வர் பொறுப்பை ஒப்படைத்து பெருமைபடுத்தி இருக்கிறது. தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றியும் உள்ளாட்சிகள் நல்லாட்சிகளாக வளர்ந்திட்டு அனைத்து துறையும் சிறந்து விளங்கிட மக்களின் உள்ளத்தில் நீங்காத அன்பை பெற்றும் பணியாற்றி வரும் மாண்புமிகு துணை முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை இம்மாமன்றம் இத்தீர்மானம் மூலம் பாராட்டுகிறது.

## 1) சி.டபிள்யு.3 / 3837 / 2009

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 18.02.2009-ம் தேதி நடைபெற்ற சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .704**
**பதிவு செய்யப்பட்டது.**

## 2) சி.டபிள்யு.3 / 1436 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 19.02.2009-ம் தேதி நடைபெற்ற வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .705**
**பதிவு செய்யப்பட்டது.**

## 3) சி.டபிள்யு.3 / 3717 / 2008

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 19.02.2009-ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .706**
**பதிவு செய்யப்பட்டது.**

## 4) சி.டபிள்யு.3 / 16628/ 2009

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 17.06.2009-ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .707**
**பதிவு செய்யப்பட்டது.**

## 5) சி.டபிள்யு.3 / 16627/ 2009

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 18.06.2009-ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .708**
**பதிவு செய்யப்பட்டது.**

## 6) ந.பொ. 1/ 36364 / 05

மதுரை மாநகராட்சியில் மத்திய அரசின் தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடைத் திட்டம் நான்கு பகுதிகளாக பிரித்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதில் முதல் இரண்டு பகுதிகள் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் சுமார் 369.00 கி.மீ. நீளத்திற்கு நகரிலுள்ள பெரும்பாலான வார்டுகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. முதல் பகுதி முடிக்கப்பட்டு மாநகராட்சியின் பராமரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதி 31.05.09க்குள் முடிக்கப்பட்டு மாநகராட்சியின் பராமரிப்பிற்கு ஒப்படைக்கப்படும் என சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தினர் தெரிவித்துள்ளனர். அரசு ஆணை (நிலை) எண். 213, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந. 2) துறை, நாள். 31.12.03ல் பாதாள சாக்கடை திட்டப் பணி முடிவுற்றவுடன் கீழ்க்கண்டவாறு மாத பராமரிப்பு கட்டணம் வசூலிக்கப்பட வேண்டுமென்று உத்திரவிடப்பட்டுள்ளது.

| விபரம் | குடியிருப்புப் பகுதி | வணிகப் பகுதி | தொழிற்சாலைகள் |
|---|---|---|---|
| **திட்டப் பணிகள் நிறைவேற்றிய பின்** | ரூ. 125/- | ரூ, 250/- | ரூ, 375/- |

மேலும் மேற்கண்ட அரசாணையில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு (Operation and Maintenance) செலவினம் முழுவதையும் மேற்படி பயனாளிகள் கட்டணங்களிலிருந்து தான் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், மதுரை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளக் கூடாது என்றும், அவ்வப்போது ஏற்படும் விலை உயர்வு (Periodic Increase) உள்ளிட்ட இத்திட்டத்திற்கான பராமரிப்புச் செலவினங்கள் அனைத்தையும் மேற்கொள்ளும் வகையில் பயனாளிகள் கட்டண விகிதங்கள் பணவீக்கத் தொடர்புடையதாக (Inflation Linked) நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் அரசாணையில் தெரிவித்துள்ள படி மாதாந்திர பாதாள சாக்கடை பராமரிப்புக் கட்டணத்தை வசூலிப்பதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .709**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 7) ந.பொ. 1/19479 / 08

மதுரை மாநகராட்சி, ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள பகுதி IIIல் ரூ.176.75 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக குடிசை பகுதிகளில் குடிநீர் வசதி , தார் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் போன்ற பணிகளை மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் முன் ஒப்புதல் பெற்று கீழ்காணும் பணிகளுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டு தொகை(ரூ இலட்சத்தி | ஒப்பந்ததாரர்கள் பெயர் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | மபொ3/ம.எ.(BSUP) 2049/08-09 வடக்கு மண்டலம் மேற்கு 7வது தெரு, பனைமரத்து தெரு, குறிஞ்சி தெரு, நெப்போலியன் தெரு மற்றும் கீழ வைத்தியநாதபுரம் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 20.82 | N.S. செல்லப்பாண்டி | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 2 | 6 | மபொ3/ம.எ.(BSUP) 2266/08-09 வடக்கு மண்டலம் கரும்பாலை குடிசை பகுதியில் சிறுபாலம் அமைத்தல் | 25.00 | ரவிந்திரக்குமார் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட % அதிகம் |
| 3 | 11 | மபொ3/ம.எ.(BSUP) 2209/08-09 வடக்கு மண்டலம் கரும்பாலை மேற்கு பகுதியில் குடிநீர் வசதி அமைத்தல் | 4.98 | A.R. ரமேஷ் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 4.95% அதிகம் |
| 4 | 18 | மபொ3/ம.எ.(BSUP) 2242/08-09 வடக்கு மண்டலம் அஹிம்சாபுரம் 1வது தெரு 6வது தெருக்கள் வரை சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 40.00 | கே.ராதா | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 5 | 18 | மபொ3/ம.எ.(BSUP) 2051/08-09 வடக்கு மண்டலம் அஹிம்சாபுரம் 1வது தெரு முதல் 4வது தெருக்கள் மற்றும் 1வது, 2வது விரிவாக்கப்பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் அமைத்தல் | 50.00 | M/s.சூர்யா கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 18 | மபொ3/ம.எ.(BSUP) 2047/08-09 வடக்கு மண்டலம் அஹிம்சாபுரம் 4வது தெரு முதல் 6வது தெருக்கள் மற்றும் 3வது, 4வது விரிவாக்கப்பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் அமைத்தல் | 50.00 | M/s.யோகா &கோ | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 7 | 1‡ 18 | மபொ3/ம.எ.(BSUP) 2046/08-09 வடக்கு மண்டலம் அஹிம்சாபுரம் 1வது, 2வது விரிவாக்கப்பகுதிகளில் மற்றும் சர்ச் 1வது முதல் 6வது தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 49.50 | B. செந்தில்குமார் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 8 | 1‡ 18 | மபொ3/ம.எ.(BSUP) 2048/08-09 வடக்கு மண்டலம் அஹிம்சாபுரம் 5வது, 2வது விரிவாக்கப்பகுதிகளில் மற்றும் இந்திராநகர் 2வது தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 50.00 | M.கார்த்திகேயன் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 9 | 1, 17‡ 20 | மபொ3/ம.எ.(BSUP) 2054/08-09 வடக்கு மண்டலம் மேற்கு 7வது தெரு பனைமரத்து தெரு, குறிஞ்சி, நெப்போலியன் தெரு, கீழவைத்தியநாதபுரம்தெரு, சுயராஜ்யபுரத்தெரு, அய்யனார் கோவில் தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 45.32 | C.துரைராஜ் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 10 | 18‡ 20 | மபொ3/ம.எ.(BSUP) 2048/08-09 வடக்கு மண்டலம் அஹிம்சாபுரம் 4வது, 5வது விரிவாக்க தெருக்கள் மற்றும் அஹிம்சாபுரம் 1வது 2வது 3வது தெருக்களில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 47.00 | B.செந்தில்குமார் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 11 | 1 | மபொ4/ம.எ.(BSUP) 2055/08-09 வடக்கு மண்டலம் சர்ச் தெரு மற்றும் இந்திரா நகர் 2வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 43.70 | G. இளகுமரன் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 12 | 20 | மபொ4/ம.எ.(BSUP) 2050/08-09 வடக்கு மண்டலம் 60 அடி சாலை தெற்கு பக்கம் மற்றும் அய்யனார் கோவில் 1வது முதல் 3வது தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 50.00 | M.B.S.ராதாகிருஷ்ணன் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 13 | 9 | மபொ7/ம.எ.(BSUP) 2096/08-09 வடக்கு மண்டலம் புரட்சி தலைவர் காலனியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 41.05 | B.மொகைதீன் கமால் பாட்சா | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 14 | 48 | மபொ5/ம.எ.(BSUP) 2063/08-09 கிழக்கு மண்டலம் அருணாச்சலப்புரம் மற்றும் இஸ்மாயில்புரம் 8வது முதல் 12வது தெருக்களில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 55.30 | B.மொகைதீன் கமால் பாட்சா | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 15 | 51 | மபொ5/ம.எ.(BSUP) 2069/08-09 கிழக்கு மண்டலம் சபேதார் தோப்பு மற்றும் குறுக்கு தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 21.25 | K.R. லிங்கத்துறை | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.47% அதிகம் |
| 16 | 22 | மபொ7/ம.எ.(BSUP) 2205/08-09 மேற்கு மண்டலம் மேல அண்ணா தோப்பில் குடிநீர் வசதி அமைத்தல் | 16.74 | B.பாண்டி | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 2.50% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | 23 | மபொ7/ம.எ.(BSUP) 2115/08-09 மேற்கு மண்டலம் ராம்நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 33.33 | M/s.மேக் கண்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 4.96% அதிகம் |
| 18 | 66 | மபொ7/ம.எ.(BSUP) 2144/08-09 மேற்கு மண்டலம் M.R.புரம் பகுதியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 50.68 | K.R.லிங்கத்துறை | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 19 | 67 | மபொ7/ம.எ.(BSUP) 2148/08-09 மேற்கு மண்டலம் கோபாலிபுரம் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 50.24 | P. முரளி | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 20 | 67 | மபொ7/ம.எ.(BSUP) 2152/08-09 மேற்கு மண்டலம் முனியாண்டிபுரம் தெருவில் மழை நீர் வடிகால் அமைத்தல் , | 49.87 | P. முரளி | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 21 | 67 | மபொ7/ம.எ.(BSUP) 2155/08-09 மேற்கு மண்டலம் மாடக்குளம் குடிசை பகுதியில் மழை நீர் வடிகால் அமைத்தல் | 46.77 | V. மகேந்திரன் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 22 | 69 | மபொ7/ம.எ.(BSUP) 2128/08-09 மேற்கு மண்டலம் தானத்தவம் புதூர் பகுதியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 34.34 | V.துரைப்பாண்டி | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 23 | 69 | மபொ7/ம.எ.(BSUP) 2126/08-09 மேற்கு மண்டலம் சம்மட்டிபுரம் முதல் D.S.P. நகர் வரை உள்ள பகுதிகளில் மழை நீர் வடிகால் அமைத்தல் | 30.52 | M/s.கிளாசிக் கன்ஸ்டரக்ஷன் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 24 | 72 | மபொ7/ம.எ.(BSUP) 2183/08-09 மேற்கு மண்டலம் கோச்சடை ஹரிஜன் காலனியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 36.78 | B.முருகன் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 25 | 72 | மபொ7/ம.எ.(BSUP) 2188/08-09 மேற்கு மண்டலம் மேலக்கால் பகுதியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 36.79 | M/s.யோகா ஃ கோ | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 26 | 72 | மபொ7/ம.எ.(BSUP) 2180/08-09 மேற்கு மண்டலம் விரட்டிபத்து பகுதியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 55.02 | V.நாகேந்திரன் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 3.00% அதிகம் |
| 27 | 72 | மபொ7/ம.எ.(BSUP) 2185/08-09 மேற்கு மண்டலம் கோச்சடை ஹரிஜன் காலனியில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் | 36.73 | S. ராமநாதன் | மதிப்பீட்டு விலை விகிதத்ததைவிட 0.54% அதிகம் |

மேற்கண்ட பணிகளுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .710</u>**
**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>**

8) <u>ந.பொ. 1/19479 / 08</u>

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மண் சாலையினை தார் சாலையாக மாற்றியமைத்திட ரூ.68.50 இலட்சம் (G.O.No. 52 (MA & WS Department), Dated .27.03.08 & ROC No.49632/07-4/LA3 Dated.19.01.09) மானியமாக வரப்பெற்றது. மேற்கண்ட உத்தரவின்பேரில் கீழ்கண்ட பணிகளில் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு உடனடியாக ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 1 | மபொ7/ம.எ1497/07-08 அய்யனார் கோவில் விரிவாக்கப் பகுதிகளில் உள்ள மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 12.90 | |
| 2 | 67 | மபொ7/ம.எ.2025/08-09 V.K.P.நகர் மெயின் மற்றும் குறுக்குத் தெருக்களில் உள்ள மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 12.60 | |
| 3 | 68 | மபொ7/ம.எ.2026/08-09 V.O.C மெயின் மற்றும் குறுக்கு தெருக்களில் உள்ள மண் சாலை தார் சாலையாக மாற்றுதல் | 7.50 | |
| 4 | 69 | மபொ7/ம.எ.1760/08-09 M.M.நகர் குறுக்கு தெரு மற்றும் மீனாட்சி நகர் மெயின் தெருக்களில் உள்ள மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 28.50 | |
| 5 | 72 | மபொ7/ம.எ.1876/08-09 H.M.S காலனி விரிவாக்கம் ஆரோக்கியமாதா மெயின் மற்றும் குறுக்கு தெருக்களில் மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 17.40 | |

மேற்கண்ட பணிகளுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .711**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 9) ம.பொ. 5 /13713 / 09

மதுரை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 58 மூலக்கரை மயானத்தில் தமிழ்நாடு அரசு பகுதி II – திட்டம் 2006- 7ல் நிதி ஒதுக்கீடு செய்து ஒப்புதல் பெற்றப்படி நவீன எரியூட்டு தகன மேடை கட்டுமான பணிகள் செய்து முடிக்கப்பட்டு தற்போது பொது மக்கள் உபயோகத்திற்கு அர்பணிக்கும் நிலையில் உள்ளது. அதன் கட்டமைப்பு இயந்திரங்கள், தளவாடங்கள். வாகனங்கள், கணினி இருக்கைகள் மற்றும் இதர சாமான்களுடன் அதன் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை அரசாணை எண்.122/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:27.06.08ன் வழிகாட்டுதல்படி சமூக தொண்டு நிறுவனம் மூலம் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்பேரில் சம்மத கடிதம் கொடுத்துள்ள "Rotery Club of Madurai Mid Town" சமூக தொண்டு நிறுவனத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை நமது மாமன்றம் ஒப்புதல் செய்யும் காலத்திலிருந்து 10 வருடக் காலத்திற்கு ஒப்படைப்பு செய்ய உத்தேசித்து அதற்கான வரைவு ஒப்பந்த நிபந்தனைகளை கீழ்க்கண்டவாறு நிர்ணயித்து ஒப்புதலுக்கு இக்குறிப்பு சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒப்பந்த வரைவு நிபந்தனைகள் :

1. பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து 10 ஆண்டு காலத்திற்கு (10 Years) மட்டுமே நவீன எரிவாயு தகன மேடை இயக்குதல் மற்றும் பராமரிப்பை அறக்கட்டளை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்படும் மேலும் கால நீட்டிப்பு தேவைப்படின் மூன்று காலத்திற்கு முன்பாகவே மாநகராட்சி ஆணையாளர் மூலமாக அரசுக்கு தகுந்த செயற்குறிப்பு அனுப்ப வேண்டும்.
2. மதுரை மாநகராட்சி தேவைக்கு எப்போது திரும்ப கேட்டாலும் எவ்விதமாக ஆட்சேபனை இன்றியும், எந்தவிதமான நஷ்ட ஈட்டுத் தொகை கோராமலும் ஆணையாளரின் திரும்ப கேட்கும் ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் நவீன எரிவாயு தகன மேடையை நன்கு இயங்கும் நிலையில் மாநகராட்சி வசம் ஒப்படைக்க அறக்கட்டளை கட்டுபட வேண்டும்.
3. மேற்படி இடத்தில் எந்தவிதமான கட்டிடமும் மாநகராட்சியின் முன் அனுமதியின்றி கட்ட அறக்கட்டளை முற்படக்கூடாது.
4. மேற்படி இடம் தகனமேடை காரியங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.
5. மேற்படி இடத்தில் சட்ட விரோதமான காரியங்கள் எதுவும் நடைபெற அனுமதி அளிக்கக்கூடாது.
6. அரசியல் சம்பந்தப்பட்ட எவ்விதமான நிகழ்ச்சிகளுக்கும் தகன மேடை பயன்பாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ள எந்தொரு பகுதியிலும் அறக்கட்டளை அனுமதிக்கக்கூடாது.
7. நவீன எரிவாயு தகன மேடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு தேவையான நிர்வாக நடைமுறைகளையும் விதிமுறைகளையும் அறக்கட்டளை வகுத்துக் கொள்வதுடன் ஆணையாளருக்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற வேண்டும் தவிர மாநகராட்சி அவ்வப்பொழுது ஆணையாளரின் வழி ஆலோசனை வழங்குவதையும் ஏற்று செயல்படலாம்.
8. பராமரிப்பு பணியினை திரும்ப ஒப்பகைக்கப்படுவதாக அறக்கட்டளை தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டால் பராமரிப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்வதற்கு (மாநகராட்சிக்கு) ஆறு மாத காலத்திற்கு முன்பே முறையான அறிவிப்பு மாநகராட்சி ஆணையாளரிடம் வழங்க வேண்டும்.

9. மேற்படி இடத்தில் உள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது சமூக விரோதிகளால் சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ, அதற்கு மாநகராட்சி எவ்விகிதத்திலும் பொறுப்பேற்க இயலாது. விதிகளுக்குட்பட்டு மாமன்ற ஒப்புதலுக்குட்பட்டு அல்லது ஒத்தழைப்பு அல்லது உதவியோ நல்கலாம்.
10. நவீன எரிவாயு தகன மேடையில் பராமரிக்க ஒரு நிர்வாகக்குழு அமைத்து உபவிதிகளையும் அறக்கட்டளை தீர்மானித்துக் கொள்ள வேண்டியது இதன் நகல் ஆணையாளருக்கு சமர்ப்பிப்பது ஒப்புதல் பெற வேண்டும்.
11. நவீன எரிவாய் தகன மேடையைப் பயன்படுத்துவோர் செலுத்த வேண்டிய கட்டணத்தை வணக்கத்திற்குரிய மேயர் மாநகராட்சி ஆணையாளர், மாநகராட்சி முதன்மை பொறியாளர் இயக்குதல் மற்றும் பராமரிப்பு அறக்கட்டளை தலைவர் மற்றும் அதன் செயலர் கொண்ட குழு நிர்ணயிக்க வேண்டும்.
12. வசூலிக்கப்படும் தகன கட்டண தொகையிலிருந்து நவீன எரிவாயு தகனமேடை இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கு உண்டான செலவினங்களான (1) எரிவாயுக்கான மூலப்பொருட்கள் கொள்முதல் (11) பணியாளர்கள் சம்பளம் (111) மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய குடிநீர் மற்றும் மின்சாரக்கட்டணம் (IV) தகனமேடை தோட்ட பராமரிப்பு (V) தகனமேடை காவல் தூய்மை சுகாதார செலவுகள் ஆகியவற்றை அறக்கட்டளை செய்து கொள்ள வேண்டும்.
13. உள்கட்டமைப்பு தேவைகளின் பொருட்டு கட்டிடங்கள் விரிவு படுத்துதல் இயந்திரங்கள் பழுது பார்த்தல் போன்ற சொத்தினங்கள் சம்பந்தமான செலவினங்களுக்கு அறக்கட்டளை மாநகராட்சிக்கு முறையான விண்ணப்பம் அளித்து முன் அனுமதியுடன் நிதி ஓதுக்கீட்டிற்கு பரிந்துரை கோரிக்கை அனுப்பலாம். அதன்தேவை மற்றும் அவசியத்தை ஆய்வு செய்து மாநகராட்சி ஒப்புதல் அளிக்கலாம். அவ்வாறில்லை எனில் அக்கோரிக்கையினை மறுக்கவும் மாநகராட்சிக்கு அதிகாரம் உள்ளது.
14. தகனக் கட்டணத்தை விட செலவினம் கூடுதலாகும் பட்சத்தில் மாநகராட்சியும், அறக்கட்டளையும் சேர்ந்து தீர்மானித்து மாநகராட்சியின் ஒப்புதலின் பேரில் மேற்படி கட்டணத்தை நிர்ணயம் செய்து வசூலிக்க அனுமதிக்கலாம்.
15. நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பு காலத்தில் தகனமேடை வரவு செலவு கணக்குகளை ஒவ்வொரு நிதியாண்டு முடிந்தவுடன் அடுத்த ஒரு மாதத்திற்குள் (அதாவது பிரதி வருடம் ஏப்ரல் 30க்கு முன்னர் ) தணிக்கை பட்டய கணக்காளர் (சார்ட்டர்டு அக்கவுண்டன்ட் மூலமாக தணிக்கை செய்யப்பட்டு அதன் நகலினை மாநகராட்சிக்கு அறக்கட்டளை சமர்ப்பிக்க வேண்டும்.
16. ஜாதி,மதம், இனம் வேறுபாடன்றி அரசியல் கட்சிகள் , அரசியல்வாதிகள் தலையீடோ, குறுக்கீடோ இன்றி ஏழை, பணக்காரர் என்ற ஏற்ற தாழ்வின்றி சமுதாயத்தில் அனைவரும் சமவிகிதத்தில் பயன் பெறும் வகையில் பொதுவானதாக நவீன எரிவாயு மின் தகன மேடை பயன்படுத்தப்பட வேண்டும். பராமரிக்கப்பட வேண்டும்.
17. நவீன எரிவாயு தகனமேடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு காலத்தின் மாத கட்டுபாடும் வாரியம் சான்றிதழ் புதுப்பித்தல் நடைமுறைகளை மாநகராட்சியின் சார்பாக அக்கட்டளை தமது சொந்தப்பொறுப்பில் செய்துக் கொள்ள வேண்டும்.
18. நவின எரிவாயு தகன மேடையில் அறக்கட்டளை எந்தவித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் கூரையோ அமைக்கக்கூடாது.
19. எரியூட்டுப்படும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்டப் பிரச்சனைகளுக்கு அறக்கட்டளையே பொறுப்பேற்க வேண்டும்.
20. அறக்கட்டளை இறந்தவரின் பெயர், வயது , தந்தை, கணவர் பெயர் , எரியூட்டப்பட்ட நாள் நேரம் பெறப்பட்ட தொகை ஆகிய விபரங்கள் அடங்கிய பதிவேட்டினை எவ்வித பிழையும் இன்றி பராமரிக்க வேண்டும்.
21. நவீன மின் தகனமேடை மதுரை மாநகராட்சி & ரோட்டரி மதுரை மிட் டவுன் நவீன தகனமேடை (MADURAI CORPORATION & ROTARY MADURAI MID TOWN MODERN CREMATORIUM) என்ற பெயரிலும் திட்டத் தலைப்பாக (Project Name) ”ஆன்மா” அல்லது அஞ்சலி என்ற தலைப்பிலும் செயல்பட வேண்டியது.
22. மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து மாநகராட்சியும் அறக்கட்டளையும் ஓர் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொள்ள வேண்டியது.

மேற்கண்ட மாநகராட்சி அனைத்து விதிமுறைகளுக்குட்பட்டும் ஒப்பந்த விபரத்தின்படியும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை ”ROTARY Club MADURAI MID TOWN” என்ற சமூக நிறுவனத்திற்கு ஒப்படைப்பு செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .712**

**நிபந்தனைகள் 6–ல் குறிப்பிட்டுள்ளதற்குப் பதிலாக, கண்ணீர் அஞ்சலி செலுத்துவதை தவிர மற்ற அரசியல் சம்பந்தப்பட்ட எவ்வித நிகழ்ச்சிகளும் தகனமேடை பயன்பாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ள பகுதியில் நடைபெற அறக்கட்டளை அனுமதிக்கக் கூடாது. இறப்பு பதிவுக்கு இங்கு மாநகராட்சி பணியாளரை அமர்த்த வேண்டும். பொருளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி இந்த அறக்கட்டளை செயல்படவில்லை என தெரியவந்தால், உடனடியாக இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கியும், இவற்றுடன் பொருளில் குறிப்பிட்டுள்ள மற்ற நிபந்தனைகளையும் ஏற்று 10 வருட காலத்திற்கு ஒப்படைப்பு செய்ய குறிப்பு ஓப்புக் கொள்ளப்பட்டது.**

10)மதி. 1 /39367 / 08

மதுரை மாநகராட்சி எல்கையுனுள் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட வரைபட அனுமதி மனைப்பிரிவு ஒப்புதல் இயந்திர நிறுவன அனுமதி விண்ணப்பப்படிவம் கட்டணம், ஊரிமையாணை கட்டணம், அனுமதி நீட்டிப்பு கட்டணம், அனுமதியற்ற மற்றும் அனுமதிக்கும் மாறான கட்டிடங்களுக்கான கட்டிட அபாரத தொகை மற்றும் கட்டிட வரைவாளர் பதிவு வைப்பு தொகை மற்றும் உரிமக்கட்டணம் ஆகியவை 1.6.2002 ம் தேதி திருத்தியமைக்கப்பட்டு தொடர்ந்து 6 ஆண்டுகளாக அந்தக் கட்டண விகுதியிலேயே வசூலிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக ஏற்படும் மாநகராட்சியில் செலவினங்களை ஈடு செய்யும்பொருட்டு இணைப்பில் கண்டுள்ளவாறு தற்போதுள்ள கட்டண விகிதத்தை 1.4.2009ந் தேதி முதல் திருத்தப்பட்ட கட்டணம் வசூலிக்க மாநகராட்சி 27.11.08ந் தேதிய தனது மாமன்ற தீர்மானம் எண் 637ல் தீர்மானம் நிறைவேற்றியதன் பேரில் பொது மக்களுக்கு ஆட்சேபணை ஏதும் இருப்பின் 30 நாட்களுக்குள் தெரிவிக்கும் பொருட்டு 23.1.2009 நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரத்தின் பேரில் பொது மக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனையும் வரப்பெறவில்லை. எனவே ஏற்கனவே மாமன்ற தீர்மான எண்.633, 27.11.08ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி 01.04.2009 முதல் கீழ்கண்டவாறு திருத்திய கட்டணங்களை வசூல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ. எண் | இன்ன காரியத்திற்காக | தற்போதைய கட்டணம் அமைப்பு | | திருத்த செய்ய உத்தேசித்துள்ள கட்டண அமைப்பு |
|---|---|---|---|---|
| | | அலகு | கட்டணம் ரூபாயில் | கட்டண ரூபாயில் |
| பரிசீலனை கட்டணம் / விண்ணப்பம் | | | | |
| 1 | அ) மனை ஒப்புதல் கட்டுமான உரிமம் கோருதல் விண்ணப்பம் | ஒன்றுக்கு | 250 | 500 |
| | ஆ) அனுமதி நீடிப்பு விண்ணப்பம் | ஒன்றுக்கு | 50 | 100 |
| | இ) மனைபிரிவு / மனை உட்பிரிவு மற்றும் தெரு அமைத்தல் அனுமதி கோருதல் விண்ணப்பம். | ஒன்றுக்கு | 300 | 600 |
| | ஈ) இயந்திரம் மற்றும் உந்து நிறுவனம் அனுமதி கோருதல் விண்ணப்பம் | ஒன்றுக்கு | 200 | 300 |
| | உ) கூடுதல் வரைபடம் கோருதல் விண்ணப்பம் | ஒன்றுக்கு | 100 | 200 |
| | ஊ) சர்வே நகல் கோருதல் விண்ணப்பம் | ஒன்றுக்கு | 150 | 300 |
| 2 | மனை ஒப்புதல் கட்டிட உரிமம் மற்றும் இயந்திர நிறுவன அனுமதி வழங்குதல் | | | |
| | அ) மனை ஒப்புதல் மற்றும் மனைபிரிவு ஒப்புதல் | 1500 ச.மீ அதன் பகுதி | 750 | 1000 |
| | ஆ) கட்டிட உரிமம் புதிதாக கட்டுதல், புதுப்பித்து கட்டுதல் , மாற்றி கட்டுதல், கூடுதல் கட்டிடம் மற்றும் கூரை மாற்றம் | | | |
| | 1 தரைதளம் | 10 ச.மீ | 60 | 150 |
| | 2 முதல் தளம் | 10 ச.மீ | 75 | 200 |
| | 3 பாதாள தரைதளம் | 10 ச.மீ | 150 | 300 |
| | 4 இரண்டாம தளம் மற்றும் மூன்றாம் தளம் | 10 ச.மீ | 150 | 300 |
| | 5 நான்காவது மற்றும் இதர தளங்கள் | 10 ச.மீ | 150 | 300 |
| | 6 கிணறு, கழிப்பறை, குளியலறை, மலக்கிடங்கு | ஒன்று | 50 | 100 |
| | 7 சுற்றுச்சுவர், பிரிவினை சுவர் மற்றும் வேலி | 10 மீ | 50 | 100 |
| | இ) தற்காலிக அனுமதி | ஒவ்வொரு மாதமாக மாதங்களுக்கு 10ச.மீ அதன் பகுதி | 40 | 100 |
| | ஈ) சில்லரை மராமத்து | | 75 | 100 |
| 3 | இயந்திரம் மற்றும் உந்து நிறுவன அனுமதி (ஓராண்டிற்கு) | 1H.P அதன் பகுதி | 30 | 50 |
| | | 1H.Pமேல் 5H.P வரை | 90 | 120 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 5H.Pமேல் 10H.P வரை | 450 | 600 |
| | | 10H.Pமேல் 25H.P வரை | 600 | 800 |
| | | 25H.Pமேல் 50H.P வரை | 750 | 1000 |
| | | 50H.Pமேல் 100H.P வரை | 1000 | 1500 |
| | | 100H.Pமேல் 200H.P வரை | 1200 | 2000 |
| | | 200 H.P மேல் | முதல் 50 H.Pக்கு ரூ.700 அதற்கு கூடுதலாக ஒவ்வொரு ஓராண்டிற்கு 50H.Pக்கு ரூ.500 வீதம் | முதல் 50 H.P.க்கு ரூ.15 அதற்கு கூடுதல ஒவ்வொரு ஓராண்டிற் 50H.Pக்கு ரூ.1000 வீதம் |
| | முறையற்ற கட்டுமானம் | அபாரதம் | | |
| | அ) விதிகளை பாதிக்கும் பகுதி | 9 ச.மீ அதன் பகுதி | 40 (அரையாண்டிற்கு) | 60 (அரையாண்டிற்கு) |
| 4 | ஆ) விதிகளை பாதிக்காத பகுதி | 9 ச.மீ அதன் பகுதி | 20 (அரையாண்டிற்கு) | 40 (அரையாண்டிற்கு) |
| 5 | அனுமதிக்கப்பட்ட கூடுதல் வரைபட நகல் ஒன்றிற்கு | | 40 | 100 |
| 6 | அனுமதி மற்றும் உரிமம் புதுப்பித்தல் | முதல் அனுமதி உரிமம் வசூலிக்கப்பட்ட விகிதத்தில் முழுமையாக வசூலிக்கப்படும் | | |
| 7 | கட்டிட வரைவாளர் உரிமம் பதிவு வைப்புத் தொகை | தகுதி A&B | 5000 | 7000 |
| | | C | 3000 | 5000 |
| | | D | 1500 | 3000 |
| | கட்டிட வரைவாளர் உரிமம் கட்டணம் (ஓராண்டிற்கு) | A&B | 600 | 1500 |
| | | C | 500 | 1000 |
| | | D | 300 | 500 |

**மாமன்ற தீர்மானம் எண் .713**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 11) ம.பொ. 3/ 42645/ 2008

மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு –21–ல் அமைந்துள்ள திரு.வி.க.மேல்நிலைப்பள்ளியில் மாணவ,மாணவியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய அளவு கட்டிட வசதி இல்லாததால் பழைய பழதடைந்த ஆய்வுக்கூடம் கட்டித்தை இடித்து அப்புறப்படுத்தவும் அதே இடத்தில் புதிய கட்டிடம் கட்டுவதற்கும் அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .714**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 12) Jn.S5/33382/2008

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கீழ்காணும் திட்டங்களுக்கு மத்திய மாநில அரசுகள் ஒப்புதல் வழங்கி உள்ளன. இத்திட்டங்களுக்கு மத்திய அரசு 50% மாநில அரசு 20% மாநகராட்சி 30% பங்குகளுடன பணிசெய்ய ஆணையிடபட்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகையுடன் ஒப்பந்தப்புள்ளி விலை விகித கூடுதல் தொகையினையும் மாநகராட்சி பங்களிப்பாக வழங்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவுத் தொகையினை மாநகராட்சியிலிருந்து வழங்க நிதிநிலை போதுமானதாக இல்லை. பட்டியலில் கண்டுள்ள திட்ட விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ரூபாய் (கோடியில்)

| திட்டத்தின் பெயர் | அரசாணை எண். | ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒப்பந்த தொகை | மத்திய அரசு பங்கு 50% | மாநில அரசு பங்கு 20% | மாநகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| மழைநீர் வடிகால் திட்டம் | 39/TUFIDCO/AM(M)2007-2008, Dated 04.05.2007 | 348.82 | 128.43 | 51.37 | 169.02 |
| பாதாளச்சாக்கடை திட்டம் | K-14012/2/2006/NURM, :30.07.2007 | 24358 | 114.67 | 45.86 | 83.04 |
| தடுப்பணை கட்டுதல் | G.O.No.132, (MA&WS) :24.09.2008 | 9.15 | 2.39 | 4.23 | 2.53 |
| மொத்தம் | | 601.54 | 245.49 | 101.46 | 254.59 |

மேற்காணும் மூன்றுதிட்டங்களுக்கும் ஆகும் மாநகராட்சி பங்குத்தொகை ரூ.254.59.-கோடியை ஐ.எல்.அண்டு எப்.எஸ்.(IL&FS) அல்லது பிற நிதி நிறுவனத்திலிருந்து கடனாகப் பெற்று திட்டத்தினை நிறைவேற்றவும் அதற்கான முன்மொழிவுகள் மற்றும் இதர நிபந்தனைகளுக்கு கடன் பெற ஆணையாளருக்கு முழு அதிகாரம் வழங்கக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .715**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

13) **Jn.S1/15710/2009**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டம் மற்றும் மதுரை மாநகராட்சி நிதி மூலம் கீழ்கண்ட திட்டங்கள் நவீன முறையில் நிறைவேற்றப்படுகிறது.

1. திடக்கழிவு மேலாண்மை
2. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்
3. மின் விளக்கு
4. எரிசக்தி சேமிப்பு
5. வாகனங்கள் பராமரிப்பு
6. மின்சார மோட்டார்கள் பராமரிப்பு

மேற்கண்ட திட்டங்கள் நவீன முறையில் நிறைவேற்றப்படுவதன் மூலம் மதுரை மாநகராட்சி மற்றும் நகரை சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுப்புறச்சூழல் பாதிக்காமலும் பசுமை வளைய வாய்வு (GREEN HOUSE GAS) கட்டுப்படுத்தப்படுவதால் உலக அளவில் இதற்கு மானியம் வழங்கப்படுகிறது. எனவே, மேற்கண்ட கரிப்படலம் சேமிப்பு (CARBON CREDIT) திட்டங்களுக்கு மானியம் பெறுவதற்கு தொழில் நுட்ப ஆலோசகர் மாநகராட்சி சார்பாக நியமிக்கவும் அதற்கான கட்டணத்தொகையை கிடைக்கப்பெறும் மானியத் தொகையிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .716**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

14) **ந.பொ. 1/ 17099/ 2009**

அரசு துணை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடிதம் எண்.253/தேர்தல்/08-09 நாள் 03.03.2009–ல் அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் : 16.02.2009-ன் படி சென்னையை தவிர மற்ற மாநகராட்சிகளில் ரூ.1.00-கோடிக்கு மேல் ரூ.5.00 கோடி வரையிலான மதிப்பீட்டு பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு வழங்கி ஆணையிட்டுள்ளதாகவும் இந்த அரசாணை தமிழ்நாடு அரசின் சிறப்பு அரசிதழ் எண்.43 நாள்:16.02.2009-ல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட அரசாணையும் தமிழ்நாடு சிறப்பு அரசிதழும் மாமன்றத்தின் தகவலுக்கும் பார்வைக்கும் சமர்ப்பிக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .717**
**பதிவு செய்யப்பட்டது**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2009ம் ஆண்டு ஜீன் திங்கள் 30-ம் நாள் செவ்வாய்கிழமை காலை 12.00 மணிக்கு**

அறிஞர் அண்ணா மாளிகை

பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்

**மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்**

**<u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>**

**1) <u>JNS 2 / 4037 / 00</u>**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் வைகை இரண்டாவது குடிநீர் திட்டம் ரூ.71.21 கோடி செலவில் பணிகள் செய்து முடிக்கப்பட்டது. மேற்படி திட்ட செலவினம் மத்திய, மாநில, மற்றும் மாநகராட்சி பங்களிப்புடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்திற்கு மத்திய, மாநில, பங்குத்தொகையாக ரூ.31.14 கோடி மூன்று தவணைகளில் பெறப்பட்டுள்ளது. எஞ்சிய பங்களிப்பு தொகையினை பெறுவதற்கு மாநகராட்சி நிர்வாகத்தால் ஏற்கனவே செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி மாநகரில் உள்ள அனைத்து குடியிருப்பு மற்றும் வணிக இணைப்புகளுக்கு குடிநீர் அளவு மானி பொறுத்தி பயனீட்டாளர் பயன்படுத்தும் குடிநீரின் அளவிற்கேற்ப உபயோகிப்பவரிடமிருந்து குடிநீர் கட்டணம் பெற்று குடிநீர் திட்டத்தின் பராமரிப்பு செலவிற்கான தொகையினை ஈடுசெய்து கொள்ளவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த நிபந்தனையை செயல்படுத்த மாநகரில் உள்ள அனைத்து இணைப்புகளுக்கும் குடிநீர் அளவு மானி பொறுத்தவும், அதற்கான செலவினை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளவும், இணைக்கப்பட்டுள்ள திருத்திய துணை விதிகளுக்கு ஒப்புதல் அளிக்கவும், திருத்திய குடிநீர் கட்டண விகிதங்கள், டெபாசிட் தொகைகள்படி பயனீட்டாளரிடம் தொகையினை வசூல் செய்ய மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

<u>மாமன்றத்தீர்மானம் எண் .718</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) <u>JNS 2 / 32922/2006</u>**

மதுரை மாநகராட்சியில் மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ஜவஹர்லால் நேரு நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நகர்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின்கீழ் (BSUP) கூரை மற்றும் ஓட்டு வீடுகளை கான்கிரீட் வீடுகளாக கட்டுவதற்கு பகுதி **1–**ல் 21 குடிசை பகுதிகளில் 9563 அலகுகளும் அனுமதிக்கப்பட்டதில் இதுவரை பகுதி 1–ல் 1606 வீடுகளுக்கும், பகுதி **2–**ல் 3529 வீடுகளுக்கும் ஆக மொத்தம் 5135 வீடுகளுக்கும் வேலை உத்தரவு வழங்கி பணிகள் நடைபெற்று வருகின்றது. மீதமுள்ள 6943 வீடுகள் பல காரணங்கினால் (நீர் பிடிப்பு பகுதி, ரயில்வே பகுதி, தனியார் நிலம் , சாலையோரப்பகுதி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான பகுதி, நீதிமன்ற தடைகள், ஒரே நிலஉரிமையாளர் பல குடியிருப்புகள் வைத்துள்ளது, ஏற்கனவே வீடுகள் கட்டப்பட்டது. முதலியன) தகுதியான பயனாளிகள் இல்லததால் வீடுகள் கட்ட முடியாத நிலை உள்ளது. 21.11.2008-ஆம் தேதி மாண்புமிகு ஊராகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆறாவது மாநில அளவிலான அனுமதி மற்றும் ஆய்வுக்குழுவின் குறிப்பில் தெரிவித்துள்ளவாறும் , **10.06.2009–**ஆம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளவாறும், மேற்கண்ட பகுதி I&II –ல் உள்ள குடிசைப்பகுதிகளில் வீடுகள் கட்ட இயலாத நிலையில் உள்ள 6943 அலகுகளுக்கு பதிலாக அருகாமையில் உள்ள குடிசை பகுதிகள் அல்லது திட்டம் செயல்படுத்தப்படாமல் உள்ள மற்ற குடிசைப் பகுதிகளை தேர்வு செய்து இலக்கினை முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளார்கள். அதன்படி தற்பொழுது மதுரை மாநகராட்சியில் இன்னும் திட்டம் செயல்படுத்தப்படாமல் உள்ள **39** குடிசைப்பகுதிகளில் பயனாளிகளை தேர்வு செய்து (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) 6943 புதிய கான்கிரீட் வீடுகளை பழைய திட்ட மதிப்பீட்டிலேயே (ரூ.92000/-) கட்டி முடித்து இலக்கினை எய்திட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண் .718</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

3) **மவ.2/ 38798 /08**

மதுரை மாநகராட்சிகளின் வருவாய் தரும் இனங்களான அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்துங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற இனங்களின் கட்டணங்கள் வசூலிக்கும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கான கால அளவை நடைமுறையில் உள்ள ஓராண்டிற்கு பதிலாக மூன்று ஆண்டுகளாக 2009-2010 முதல் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை அரசாணை (நிலை) எண்.78 நாள்: 25.05.09ல் அரசு அரசாணை வழங்கியுள்ளது.

i. ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாம் ஆண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையை 5% குத்தகை தொகை உயர்வும் செய்யலாம். உதாரணமாக 5% குத்தகை உயர்வு தொகை கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு அமையும். ஆரம்பத்தொகை ரூ. 100 என்றால் (ரூபாய் நூறு மட்டும்) இரண்டாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ.105 (ரூபாய் நூற்றி ஐந்து மட்டும்) மூன்றாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ.110.25 (ரூபாய் நூற்றி பத்து மற்றும் இருபத்தி ஐந்து பைசா மட்டும்) ஆக இருக்கும்.

ii. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அங்காடிகள் , பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்துங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் ஆகிய இனங்களில் கட்டண வசூலிக்கும் உரிமை பொது ஏலத்தில் விடப்பட வேண்டும்.

iii மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைத்தாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வுரிமைத்தை திரும்ப பெறலாம். வாரிசுத்தாரருக்கு இல்லையெனில் உரிமை மறு ஏலம் விடப்படும்.

iv. இவைகளை தவிர மாநகராட்சியில் உள்ள அங்காடிகள் , பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்துங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற இனங்களின் கட்டண வசூலிக்கும் உரிமைகளை குத்தகைக்கு விடுவதற்காக ஏற்கனவே நடைமுறையில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் தொடரும்.

v. மாநகராட்சியிலிருந்து வெளியிடும் ஆண்டுக் குத்தகை அறிவிக்கைகளில் குத்தகை நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை தக்கவாறு திருத்தியமைக்க வேண்டும்.

vi. மேற்சொன்ன நெறிமுறைகளை மாநகராட்சி தவறாது பின்பற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணை (நிலை) எண்.78, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் :25.05.09 மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .720**
**பதிவு செய்யப்பட்டது**

4) **ம.பொ.5/17575/09**

மதுரை மாநகராட்சியின் சார்பில் மத்திய காய்கறி அங்காடி மையம் அமைக்க (21.06.2009) அன்று ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அருகில் மாண்புமிகு மத்திய உரம் மற்றும் இரசாயனத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கீழ்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

1. விழாவிற்கான அலங்கார மேடை மற்றும் பந்தல் அமைத்தல்.
2. மின்விளக்கு வசதி மற்றும் மைக்செட் வசதி அமைத்தல்.
3. விருந்தினர்கள், பார்வையாளர்கள் மற்றும் பயனாளிகள் அமர்வதற்கென இருக்கை வதி அமைத்தல்.

மேற்கண்ட பணிகள் மாநகராட்சி சட்டம் 15(C)ன் கீழ் வணக்கத்திற்குரிய மேயர் முன் ஒப்புதலுடன் செய்து முடிக்கப்பட்டது. இதன் உத்தேசித்த மதிப்பீடு தொகை ரூ.24.00/- இலட்சம ஆகும்.
மேற்கண்ட மதிப்பீடுகளுக்கு உரிய பின்னேற்பு ஒப்புதல் வேண்டி ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .721**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

5) **Jn.S4/01549/2009**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டாம் வைகை குடிநீர்த்திட்டத்திற்கு ரூ.59.32 கோடியும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு ரூ.74.29 கோடியும், தடுப்பணை அமைத்தல் திட்டத்திற்கு ரூ.4.77 கோடியும், நகர்ப்புற ஏழை மக்களின் அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் பாகம் I-க்கு – ரூ.103.58 கோடியும், பாகம் II க்கு – ரூ.26.86 கோடியும் மொத்தம் ரூ.269.84 கோடி திட்டங்களுக்கு மத்திய மாநில அரசின்

ஒப்புதல் பெற்று செயல்பட்டு கொண்டிருக்கின்றன. இத்திட்டங்களை செயல்படுத்த அரசாணை G.O.No.(2D) 105, MA & WS Dt., 26.06.07-ல் ஒரு கண்காணிப்பு பொறியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி திட்டங்களுக்கு பின் மழை நீர் வடிகால் திட்டம் ரூ.256.87 கோடிக்கும் பாதாளச் சாக்கடை திட்டம் ரூ.229.34 கோடிக்கும் நகர்ப்புற ஏழை மக்களின் அடிப்படை வசதி மேம்பாட்டுத்திட்டம் பாகம் III - ரூ.176.17 கோடிக்கும் ஆக மொத்தம் ரூ.கோடிக்கும் ஆக மொத்தம் ரூ.662.95-கோடிக்கு மத்திய மாநில அரசு ஒப்புதல் வழங்கி திட்டங்கள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. மேற்படி திட்டங்களை கண்காணித்து நிறைவேற்ற மேலும் ஒரு கண்காணிப்பு பொறியாளர் பணியிடம் தோற்றுவிக்க வேண்டி கடிதம் எண்.JnS4/01549/09, நாள்.09.02.09 அன்று ஆணையாளர் அவர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

அரசாணை எண்.G.O.(Pa)No.312,MA&WS,dt.09.08.06-ல் மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர் பணி உயர்வு பட்டியல் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதில் வரிசை எண்.1-ல் உள்ள திரு.வி.மோகன்தாஸ் அவர்கள் 28.02.2010 அன்று பணி ஓய்வு பெறுவதாலும் வரிசை எண்.2-ல் உள்ள திரு.கே.என்.தாமோதரன் அவர்கள் 31.12.2009 அன்று பணி ஓய்வு பெறுவதாலும் தங்களுக்கு பணி உயர்வு வேண்டாம் என கடிதம் கொடுத்துள்ளார்கள். வரிசை எண்.3–ல் உள்ள திரு.ஏ.மதுரம் அவர்கள் தற்போது ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தில் செயற்பொறியாளராக கடந்த 3 ஆண்டுகள் பணியாற்றி வருகின்றார். எனவே, திரு.ஏ.மதுரம் அவர்களுக்கு கண்காணிப்பு பொறியாளர் பணி உயர்வு வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையரின் குறிப்பு.

## மாமன்ற தீர்மானம் எண் .722

**தற்போது JnNURM –பிரிவில் உள்ள ஒரு செயற்பொறியாளர் பணியிடத்தை தரம் உயர்த்தி கண்காணிப்பு பொறியாளர் என்று தோற்றுவித்து அப்பணியிடத்தில் செயற்பொறியாளர் திரு.ஏ.மதுரம் அவர்களுக்கு பணிஉயர்வு வழங்க அரசுக்கு பரிந்துரை செய்து மாமன்றம் தீர்மானிக்கிறது.**

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

# Out Of Agenda

## 1) சி.டபிள்யு.2 / 0478/ 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 22.06.2009-ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .723**
**பதிவு செய்யப்பட்டது.**

## 2) ம.நி.1 / 29754/ 2003

மதுரை மாநகராட்சி பணியாளர்களுக்கு வெளியிடப்பட்ட பணிவிதிகள் அரசாணை நிலை எண்.237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை நாள்:26.09.96ன்படியும் மதுரை மாநகராட்சி பணியாளர்கள் பணியிடங்கள் நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை, நாள்:12.05.1998ன்படியும் தோற்றுவிக்கப்பட்டுள்ள 4 நிர்வாக அலுவலர்கள் பணியிடங்களும் 3 கணக்கு அலுவலர் பணியிடங்களும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு மதுரை மாநகராட்சி பணியாளர்களிலிருந்து பணிஉயர்வு மற்றும் பணிமாறுதல் மூலம் நிரப்பப்பட வேண்டும் என அரசு ஆணையிடப்பட்டுள்ளது. கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பணியிடங்கள் ஒரே சம்பள விகிதமாகவும், ஒன்றுக்கொன்று பணிமாறுதல் செய்யக்கூடிய பணியிடங்களாக உள்ளதால் ஏற்கனவே வெளியிடப்பட்ட பணிமூப்புப் பட்டியலின் அடிப்படையில் 2009-10ம் ஆண்டில் காலியாக உள்ள மற்றும் காலி ஏற்படும் கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்பிட கண்காணிப்பாளராக பணிபுரிந்து வரும் கீழ்கண்ட 8 நபர்களை கொண்டு பணி உயர்வு பட்டியல் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

1. திரு.பி.சுப்பிரமணியன், கண்காணிப்பாளர்
2. திரு.ஆர்.மாரிமுத்து, கண்காணிப்பாளர்
3, திரு.ஆசைதம்பி, கண்காணிப்பாளர்
4. திருமதி.கே.அரியநாச்சி, கண்காணிப்பாளர்
5. திருமதி.எஸ். செலீனா, கண்காணிப்பாளர்
6. திருமதி.ஏ. சந்திரபாய், கண்காணிப்பாளர்
7. திருமதி.ஏ.மாரியம்மாள், கண்காணிப்பாளர்
8. திரு.எஸ்.கே. தியானேஸ்வரன், கண்காணிப்பாளர்

குறிப்பு:-

1. பணிவிதிகளின்படி கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பணியிடங்கள் இரண்டாம் நிலை பணியிடங்கள் இவை இரண்டும் ஒரே சம்பள விகிதத்தில் உள்ளன.
2. இந்த இரண்டு பணியிடங்களும் மாநகராட்சி பணியாளர்களிலிருந்து பணி உயர்வு மற்றும் பணி மாறுதல் மூலம் நிரப்பப்படும் பணியிடமாகும்.
3. பணிவிதிகளின் நிர்வாக அலுவலராக பணி மாறுதல் செய்ய 2 ஆண்டுகள் கணக்கு அலுவலராக பணிபுரிந்திருக்க வேண்டும் என்றும் கணக்கு அலுவலர் பணி உயர்வு செய்ய இரண்டு ஆண்டுகள் கணக்கு பிரிவில் கண்காணிப்பாளராகவும் இரண்டு ஆண்டுகள் கணக்கராகவும் பணிபுரிந்திருக்க வேண்டும் என்றும் உள்ளது.
4. மாநகராட்சி பணியாளர்கள் எவரும் இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ளதால் இந்த நிபந்தனையை தளர்வு செய்ய அரசுக்கு இவ்வலுவலக கடிதம் எண்.மநி1/00763/01 நாள் :30.08.2005 உத்தேச பிரேராணை அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.
5. பணிமுதிர்ச்சி பட்டியலில் உள்ள நபர்கள் பணிவிதிகளில் உள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யாததால் அரசின் உறுதியாக்கம் மற்றும் அரசு உத்தரவுக்கு உட்பட்டு பணி உயர்வு வழங்கப்படும்.
6. இந்த பணியாளர்கள் பணி உயர்வு செய்யப்பட்டாலும் இவர்களது பணி உயர்வு அரசின் உறுதியாக்கம் ஏற்பட்ட பின்னரே அதற்குண்டான சம்பள விகிதம் வழங்கப்படும். அதுவரை ஏற்கனவே பெற்றுவரும் சம்பளவிகிதம் நீடிக்கப்படும்.

**மாமன்ற தீர்மானம் எண் .724**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

3) **JnS4/1538/2009**

மதுரை மாநகராட்சி மத்திய காய்கறி சந்தையை ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தின் அருகில் காலியாக உள்ள மாநகராட்சி இடத்தில் மாற்றி அமைப்பதற்கு திட்ட வரைவு தயார் செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டு தொகை ரூ.63-கோடி. இத்திட்டத்தின் மதிப்பீடு ஏற்கனவே ***" புராதான அமைப்புகளை மேம்படுத்தும் திட்டத்துடன்*** " சேர்த்து சுமார் ரூ.126.00 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து மத்திய அரசின் நகர்புற மேம்பாட்டிற்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தில் செய்ய அனுப்பி வைக்கப்பட்டது.

திட்ட மதிப்பீடு பரிசீலனையின் போது JnNURM திட்டத்தில் ***" மார்க்கெட் அமைத்தல்*** " போன்ற இனங்களுக்கு நிதியுதவி அளித்தல் சாத்தியமாகாது என தெரிவிக்கப்பட்டது. இதை தொடர்ந்து ***" மத்திய காய்கறி சந்தையை*** " இடமாற்றம் செய்து ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தின் அருகில் அமைப்பதற்கு ரூ.63.00 கோடிக்கு தனியாக ஓர் திட்ட வரைவு பேருந்து தயார் செய்து மாநில அரசின் ***" National Horticulture Mission (NHM)*** " திட்டத்தின் கீழ் மதிப்பீட்டு தொகையில் 40% மானியமாகவும், மாநில அரசின் ***" Gap Filling Fund*** " மூலமாகவும் பெற்று 10% மானியத் தொகையுடனும், மீதமுள்ள 50% தொகையினை தனியார் பங்களிப்பு மூலமாகவும், (PPP Mode) கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு மானியங்களை பெற்று தனியார் பொதுமக்கள் பங்களிப்பு மூலம் தற்போதுள்ள ***" மத்திய காய்கறி சந்தையை*** " இடம் மாற்றம் செய்து புதிய மார்கெட் அமைக்க கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .725**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

4) **ம.நி.1 / 17723/ 09**

மதுரை மாநகராட்சி நகரமைப்பு பிரிவிற்கு பணியாளர் எண்ணிக்கையை நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை நிலை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:12.05.98ல் ஏற்கனவே இருந்த ஒரு செயற்பொறியாளர் (திட்டம்) பணியிடத்தை தக்க வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை நிலை எண் 139, நகராட்சி நிர்வாம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:27.05.97ல் வழங்கப்பட்டுள்ள ஆணைகளுக்கு இனங்க நிரப்பப்பட வேண்டும் எனவும் வழிகாட்டப்பட்டுள்ளது. இந்த அரசாணையில் யாரெல்லாம் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) ஆக தனி இனமாக பணிபுரிந்து வருகிறார்களோ அவர்களிலிருந்து செயற்பொறியாளர் (திட்டம்) பணியிடத்தை நிரப்ப பரிசிலீக்கலாம் என தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இது வகுப்பு 1 பணியிடமாக இருப்பதால் மேற்படி அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு இப்பணியிடத்தை நிரப்ப அரசுக்கு பிரேராணை அனுப்ப வேண்டும். தற்போது நகரமைப்பு பிரிவில் கீழ்கண்ட அலுவலர் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) ஆக பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ.எண் | பெயர் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1. | திரு.கே.பெரியசாமி | 01.06.2000 |
| 2. | திரு.பி.முருகேசன் | 11.08.2005 |
| 3. | திரு.ஐ.ரெங்கநாதன் | 11.08.2005 |
| 4. | திரு.ஏ. பழனிச்சாமி | 11.08.2005 |

மேற்படி பணி மூப்பு பட்டியலில் முதலாவதாக உள்ள திரு.கே.பெரியசாமி, உதவி செயற்பொறியாளரின் (திட்டம்) பதவி உயர்வுக்கு இதுவரை அரசின் உறுதியாக்கம் பெறப்படவில்லை. மேலும் அரசாணை (ப) எண்.412 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் :10.10.2006ன்படி அன்னாருக்கு ஓராண்டு திரண்ட பயனுடன் உதவி உயர்வு நிறுத்தி தண்டனை வழங்கப்பட்டுள்ளது. எனவே அவரை பணி உயர்வு பட்டியலில் சேர்க்க இயலாத நிலை உள்ளது. அன்னாருக்கு அடுத்துள்ள மூவருக்கும் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) ஆக பதவி உயர்வு பெற்றதை அரசாணை 4D எண்.1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:11.03.2009ல் அரசின் உறுதியாக்கம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் புதிய பணி விதி அரசாணை 1996ன் பிரிவு 24. (3)ன்படி இந்த மூவருக்கும் தண்டனை வழங்கி ஆணை எதுவும் இதுவரை பிறப்பிக்கப்படவில்லை. மேலும் வரிசை எண்.2ல் உள்ள திரு.பி.முருகேசன் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) அவர்கள் செயற்பொறியாளர் (திட்டம்) பணியிடத்தை கடந்த நான்கு ஆண்டுகளாக பொறுப்பு பணி பார்த்து வருகிறார். ஆகவே மேற்படி பட்டியலில் 2 மற்றும் 3 வரிசை எண்ணில் உள்ள கீழ்கண்ட இருவர் அடங்கிய பணி உயர்வு பட்டியல் ஒப்புதல் செய்ய வேண்டியது.

1. திரு.பி. முருகேசன்
2. திரு. ஐ. ரெங்கநாதன்

மேற்படி பணி உயர்வு பட்டியல் ஒப்புதல் செய்த பின் இதில் மூத்தவராக உள்ள திரு.பி,முருகேசன் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) செயற்பொறியாளர் (திட்டம்) பதவி உயர்வு வழங்கி ஆணை பிறப்பிக்கமாறு அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .726**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

4) **ம.வ.5 / 18194/ 2009**

மதுரை மாநகராட்சி சி4 திலகர் திடல் காவல் நிலையம் கட்டிடம் 100 ஆண்டுகள் பழமை அடைந்திருப்பதால் மேற்படி கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடமாக கட்டி முடிக்கும் வரை, மேற்படி சி4 காவல் நிலையத்தை, மாநகராட்சி 35- வார்டு அனுமார் கோவில் படித்துறையில் உள்ள கந்தசாமி பிள்ளை தெருவில் குடிசைப்பகுதியில் அமைந்துள்ள சுமார் 2600 சதுர அடியில் தற்பொழுது எவ்வித உபயோகத்திலும் இல்லாத மாநகராட்சி பள்ளிக்கூடத்தில் தற்காலிகமாக அமைத்துக் கொள்ளவும், மேற்படி இடத்தினை மாதந்திர வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்து வழங்கவும், கோரியுள்ள சி4 திலகர் திடல் (சட்டம் மற்றும் ஒழுங்கு) காவல் ஆய்வாளர் கடிதம் வாசிக்கப்பட்டு, மேற்படி பள்ளிக்கூட கட்டிடம் சமூக விரோதிகளின் தங்கும் கூடாரமாகவும், ஆக்கிரமிப்பாகவும் இருப்பதால், சி4 காவல் நிலையத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்க 35–வது வட்டம் மாமன்ற உறுப்பினர் கோரிக்கையின் பேரில், மேற்படி பள்ளிக்கூடத்தை அரசு விதிகளின் படி, மாதாந்திர வாடகை அடிப்படையில் சி4 காவல் நிலையம் அமைத்துக்கொள்ள ஒதுக்கீடு செய்யகோரும் ஆணையாள் அவர்களின் குறிப்பு.

குறிப்பு : மேற்படி பள்ளிக்கூட கட்டிடத்திற்கு பொறியியல் பிரிவிலிருந்து வாடகை நிர்ணயம் செய்து வழங்கப்படும்

**மாமன்ற தீர்மானம் எண் .727**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

5) **H1 / 12958/ 09**

மதுரை மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட பழைய நத்தம் ரோடு (ONR) மகப்பேறுமனை மட்டும் ஆயுதப்படை குடியிருப்பியுள்ள மாநகராட்சி ஆரம்பப் பள்ளியின் ஒரு பகுதியில் செயல்பட்டு வருகிறது எனவும் கடந் சில ஆண்டுகளாக ONR மகப்பேறுமனையில் பிரசவத்தின் எண்ணிக்கை குறைந்து கொணடு வருவதாகவும், புறநகர் பகுதிகளில் பிரசவங்கள் அதிகமாக நடப்பதாகவும், இந்த ONR மகப்பேறுமனையுடன் சேர்ந்த செயல்பட்டு வந்த நலவாழ்வுமையம் எண்.5 கோ.புதூருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும், நலவாழ்வு மையம் எண்.5 கோ.புதூர் மையத்தில் தாய் சேய் நலம் குடும்ப நலம் மற்றும் பிற நோயாளிகளுக்கும் சிகிச்சை மற்றும் சிறப்பு சேவை மையங்களுடன் (I.C.T.C, T.B & Leprosy) இயங்கி வருவதாகவும், இத்துடன் மகப்பேறுமனையும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மக்களுக்கு சிறப்பான நலச்சேவை செய்வதற்கு உகந்ததாக இருக்கும் எனவே, மகப்பேறுமனைகள் கண்காணிப்பாளர், நகர் நல அலுவலர் (பொ) ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

மேலும், அப்பகுதி ஏழை மக்களுக்காக மாநகராட்சி மகப்பேறுமனை புதிதாக கட்டுப்பட்டுள்ளதாகவும், இதற்கென மருத்துவ அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்கள் புதிதாக நியமனம் செய்வதற்கு பதிலாக ONR மகப்பேறு மனையினை இம்மையத்திற்கு மாற்றம் செய்தால், நலவாழ்வு மையம் எண்.5 –ன்மருத்துவ அலுவலர் கூடுதல் பொறுப்பு மேற்கொண்டு இயங்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, ONR மகப்பேறு மனையினை கோ.புதூர் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மாற்றம் செய்தால், மாநகராட்சி மகப்பேறுமனையில் பிரசவத்தின் எண்ணிக்கையை அதிகரித்து பொதுமக்களுக்கு சிறப்பான சேவை செயல்படுத்தலாம் எனவும், தெரிவித்துள்ள நகர்நல அலுவலர் (பொ) அவர்களின் குறிப்பு வாசிக்கப்பட்டு அதன்பேரில் ONR மகபபேறுமனையினை கோ.புதூரில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மாற்றம் செய்வதற்கு மாமன்றக்கூட்டத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .728**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**மாமன்ற தீர்மானம் எண் .729**

**தீர்மாமனம்**

மதுரை மாநகராட்சி பகுதியில் சானிட்டரி இன்ஸ்பெக்டர் மேற்பார்வையில் குப்பைகள் அகற்றப்பட்டு வருகிறது. பொறியியல் பிரிவு மூலமாக குப்பைகளை அகற்றுவதா அல்லது சுகாதார ஆய்வாளர் மூலமாக குப்பைகளை அகற்றுவதா என்பதுபற்றி மேயர் மற்றும் ஆணையாளர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மாமன்றத்திலும் தெற்கு மண்டலத் தலைவர் அவர்களால் இந்த பொருள் பற்றி முடிவு அறிவிக்குமாறு பேசப்பட்டது.

அரசாணை எண். 241, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்: 1.10.1996 பத்தி எண்.11–ல் சம்பந்தப்பட்ட வார்டில் பணிபுரியும் இளநிலைப் பொறியாளர்/உதவிப் பொறியாளர் ஆகியோர் துப்பரவு பணியை பார்க்க வேண்டும் என்றும் துப்பரவு பணியைத் தவிர மற்ற பணிகளை சுகாதார ஆய்வாளர்கள் (Sanitary Inspectors) பார்க்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பொறியியல் பிரிவில் குடிநீர், பாதாள சாக்கடைப் பணி, தெருவிளக்கு பணி மற்றும் திட்டப் பணிகள் செய்துகொடுப்பது, ஆகிய அனைத்து பணிகளையும் சம்பந்தப்பட்ட வார்டு இளநிலைப் பொறியாளர் / உதவிப் பொறியாளர் மூலமாக செய்து வரும் நிலையில், இந்த பணிகளுடன் கூடுதலாக துப்புரவு பணிகளையும் இவர்கள் சேர்த்து பார்ப்பது மிகவும் சிரமமாக இருக்கும் என இம்மான்றம்

கருதுவதால், ஏற்கனவே துப்பரவு பணி பார்த்து வருவதுபோல், சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் தொடர்ந்து துப்புரவு பணி பார்ப்பதற்கு, அரசாணை எண்.241, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்: 1.10.1996 பத்தி எண்.11–க்கு திருத்தம் (Amendment) வெளியிட, அரசை கேட்டுக்கொள்ள இம்மான்றம் பரிந்துரைக்கிறது.

இந்த அரசாணைக்கு அரசு திருத்தம் (Amendment) வெளியிடும் வரை, ஒவ்வொரு வார்டிலும், தற்போது குப்பைகளை அகற்றிவருவதுபோல், கன்சர்வன்சி இன்ஸ்பெக்டர்கள் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோர்கள் மூலம் சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் மேற்பார்வையில் குப்பைகள் அகற்றப்பட வேண்டும் என மாமன்றம் தீர்மானிக்கிறது.

ஒம்) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : 30.06.2009